எடுத்தது. மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் மத்திய அரசில் ஜனதாதுபத ஒப்புதல் அளிக்காமையால் தாமதப்பட்டு கைவிடப்பட்டதாக அறிகிறேன். இன்லறக்கு மூடிக்கிடக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமைகளை எண்ணிப் பார்த்து இடர்பாடுகள் பலவும் இருப்பினும் இந்த அரசு அந்த ஆலையை மீண்டும் திறக்க முயறசி செய்யுமா என்று அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த ஆலை கடுமையான நிதிப் பற்றாக்குறை காரணமாக 15—6—1983 லிருந்து மூடப்பட்டிருக்கிறது. இதை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பது பல்வேறு கூறுபாடுகளை எல்லாம் அலசிப் பார்த்து முடிவெடுக்க வேண்டிய ஒன்று. அரசு ஏற்றுக்கொண்டாலும் ஒரு 'வயபின் யூனிட்' டாக கொண்டுவர இயலுமா என்று எண்ணிப்பார்த்துதான், இந்தப் பரிசீலனைக்குப் பின்னால் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகத் தெரிவித்ததற்கு நன்றி. இந்த ஆலை அந்த மாவட்டத்தில் உள்ளபடியே ஒரு பெரிய உருக்கு திறன் கொண்ட உருக்காலையாக அமைந்தது. மூடப்பட்டபோதும் கூட இருந்த யதார்த்த நிலைமை, நல்ல ஆர்டர் இருந்தது. ஆனால் நிர்வாகிகளின் நடவடிக்கையின் காரணமாக, சீர்கேடுகள் உருவாக்கப்பட்டதின் காரணமாக மூடப்பட்டது. அவற்றை எல்லாம் அரசு கருத்தில் கொண்டு பின்தங்கிய இப்பகுதியில் அந்த ஆலையை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய பெரிதும் ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

(ஆ) திருவாரூர் மருத்துவமனைக்குத் தண்ணீர் இணைப்பு வழங்கப் பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு. வி. தம்புசாமி அவர்களுக்குப் பதிலாக திரு. கோ. வீரையன் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவாரூர் அரசு மருத்துவ மனையில் ஆறு ஆண்டுகளாக தண்ணீர் இணைப்பு வழங்கப்பெறாமல் இருப்பது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருவாரூர் நகர விஜயபுரம் மருந்தகத்தில் கண் சிகிச்சை முகாம் தற்போது நடந்து வருகிறது. இரண்டு குழாய்கள் மூலமாக மட்டுமே தண்ணீர் மருத்துவமனைக்கு வருவதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேற்கொண்டு அதிக அளவு குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்க அங்குள்ள நகராட்சி அமைப்பினை அணுகி வேண்டுவன செய்ய மாவட்ட மருத்துவ அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும், இங்கு வழங்கப்படும் தண்ணீர் திருவாரூர் நகராட்சி மூலமாக வழங்கப்படுகிறது என்று மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநர் கூறியுள்ளார்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபர அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதற்கும் அங்கே இருப்பதற்கும் ஒத்துவரவில்லை. ஆறு ஆண்டு காலமாக அந்த மருத்துவமனைக்கு தண்ணீர் வழங்கப்படவில்லை. தண்ணீர் வழங்குவதற்கான இணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறது என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இரண்டு குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதாகச் சொல்லப்பட்டிருப்பது யதார்த்தமான நிலைமை இல்லை. இன்னும் தண்ணீர் வழங்கப்படாமல்தான் இருக்கிறது. இப்போதாவது அந்த மருத்துவமனைக்கு துரிதமாக நகராட்சியிலிருந்து தண்ணீர் இணைப்பு கொடுத்து, தண்ணீர் தட்டுப்பாட்டை, தண்ணீர் இல்லாமையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவரவர்களே, அந்த மருத்துவமனைக்கு நகராட்சி மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது. அந்த நகராட்சி ஆணையரை அணுகி மேலும் விரைவாகப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று மருத்துவத் துறை இயக்குநர் அந்த ஆணையருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை மனதில் கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1989-90 ஆம் ஆண்டிற்கான மானயககோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். . . .

(3) ஒழுங்குப் பிரச்சினை

மானியக் கோரிக்கைகள் தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புகள் முன் கூட்டியே உறுப்பினர்களுக்கும் கிடைக்காதது குறித்து.

*திரு. சோ. அழகர்சாமி: சார். பாயின்ட் ஆப் ஆர்டர், மானியக் கோரிக்கைகளை விவாதப்பதற்காக, உறுப்பினர்கள் சில விவரங்களைத் தெரிந்துகொள்வதற்காக சில குறிப்புகள், பிரசுரங்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. ஆனால் இன்றைக்கு விவாதிக்கப்படவிருக்கிற மானியக் கோரிக்கைகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் இன்றைக்கு மேசைமேலே வைக்கப் பட்டிருக்கின்றன. சில நேரங்களில இரவு நாங்கள் தூங்கப் போகிறபோதுதான் குறிப்புகள் வந்து சேருகின்றன. ஆகவே, அந்த விவரங்களை முழுமையாக நாங்கள் படித்து, தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல போய்விடுகிறது. ஆகையால சில தினங்களுக்கு முன்பு அல்லது இரு தினங்களுக்கு முன்பா வது குறிப்புகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல. மாண்புமிகு உறுப்பினா அவாகளுடைய கருத்து முற்றிலும் ஏற்கப்படுகிறது. சில தினங்கள் விடுமுறையாக இருந்ததால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும குளித்து விட்டு அவசரம் அவசரமாக வந்திருப்பார்கள். அதனால படித்துப்பார்க்க நேரம் இல்லாமல இருந்திருக்கக்கூடும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நான் காலை 5-00 மணிகே எழுந்து குளித்துவிடும் பழக்கம் உள்ளவன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்களுக்காக சிங்காரமாகச் சொன்னேன் (சிரிப்பு) அடுத்து மானியக கோரிக்கைமீது விவாதம்.

(முற்பகல் 11—0(.)

6. மானியக் கோரிககைகள் 1989-90 விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி.

[அ] கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

மாண்புமிகு திரு. வீரப்பாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழககண்ட தீர்மானததை மொழிகிறேன்: